வற்புறுத்தாமல் தலைமையாசிரியரின் முடிவுக்கே இத்திட்டத்தை விட்டு விட்டால், அது செயல்படுவதற்குச் சௌகரியமாக இருக்குமென்பதை அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் பொதுவாக வற்புறுத்தப்படுகிற தன்மை ஏற்படவில்லை. அதுபற்றி ஆணை பிறப்பிக்கப்படவில்லை. கால மாறுதல் ஏற்படுத்துவது நன்மை பயக்கும் என்று ரேன்ஜ் அளவில் துவக்கப் பள்ளிகளில் மற்ற இடங்களிலும் ஏற்படுத்துகிறார்கள் என்று கருதுகிறேன். சிலர் தாமதமாகவே அதற்கு உடன்பட்டு வருகிறார்கள். நன்மை பயக்கும் என்று சில பள்ளிகளிலும் வைத்திருக்கிறார்கள். அதில் நன்மை இருப்பதாகவும் அவர்கள் சொல்கிறார்கள். வைணவக் கல்லூரி, கந்தசாமி கல்லூரி ஆகியவற்றில் காலை 7½ மணிக்குத் துவங்கி 1½ மணிக்கு முடிக்கிறார்கள். பேராசிரியர்கள் அதில் நன்மை இருக்கிறது என்று கருதுகிறார்கள். அதை வற்புறுத்தி இன்ன நேரத்தில்தான் துவங்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. இப்படிப்பட்ட நேரம் படிப்புக்கு ஏற்றதாக இருக்குமென்று எடுத்துத் தெரிவிக்கப்பட்டது.

*Madras Zoo*

* 21 *Q*.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether the Government have received any complaint regarding the neglect of animals in the Madras Zoo; and

(*b*) if so, the action taken thereon ?

**சென்னை விலங்குக் காட்சி சாலை**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையிலுள்ள விலங்குக் காட்சிச் சாலையில் விலங்குகள் சரிவர கவனிக்கப்படாமலிருப்பது குறித்துப் புகார் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆம். விலங்கு காட்சி சாலையை வேறு வசதியான இடத்திற்கு மாற்றுவதற்கான யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இந்த விலங்குக் காட்சி சாலையிலுள்ள பல விலங்குகள் நோயுற்ற நிலையில் இருப்பதாகவும் அதைக் கண்காணிப்பதற்கு தனியாக மிருக வைத்தியர் ஒருவர் இல்லை என்றும் சொல்லப்படுகிறதே, அது உண்மையா ?



TRUTH ALONE TRIUMPHS

[25th January 1972

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அங்கு விலங்குகளுக்கு ஒருவித நோய் ஏற்பட்டது. அது ஓரளவுக்குத் தணிக்கப்பட்டுக் கண்காணிக்கப்படுகிறது. மிருக வைத்தியர் இருக்கிறாரா இல்லையா என்ற குறிப்பு இல்லை, அங்கு 600 விலங்குகளுக்கு மேலாக இருப்பதாகக் கூறப்படுகிறது. அதற்குச் சூழ்நிலை ஏற்றதாக இல்லை என்ற காரணத்தால் விரைவில் அதை மாற்ற வேண்டுமென்ற கருத்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே 21 எக்கர் நிலத்தில் 600 விலங்குகள் இப்போது இருக்கின்றன. அதைத் தக்க இடத்திற்கு மாற்ற வேண்டுமென்ற முறையில் கிண்டிக்கு அருகிலுள்ள பகுதியும் வண்டலூர் பகுதியும் அதற்கேற்ற இடங்களாக ஆலோசிக்கப் பட்டன. கிண்டிக்குப் பக்கத்தில் மாற்றுவதுதான் பொறுத்தமாக இருக்குமென்று தெரிவிக்கப்பட்டு, புது டில்லியிலிருந்து வந்த விலங்கின இயக்குனர் இரண்டு இடங்களையும் பார்வையிட்டுவிட்டு, எந்த இடம் பொருத்தமுள்ளது என்று அறிக்கையைச் சமர்ப்பிக்க இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து அறிக்கை எதிர்பார்க்கப் படுகிறது. வந்தால் அந்த இடத்திற்கு விரைவில் மாற்ற வேண்டு மென்று இருக்கிறது. இதனால் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படாது. இப்போது விலங்குக்காட்சி சாலை இருக்கிற இடத்தை ரயில்வே துறையினர் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர் களுக்குத் தந்தால் லட்சக்கணக்கான ரூபாய் அதற்காக விலை கொடுக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு புதிய விலங்குக் காட்சி சாலையை இன்னும் செம்மையாக அமைக்க முடியும் என்ற கருத்து இருக்கிறது. மிருக வைத்தியர் தற்போது அங்கே இருக் கிறாரா இல்லையா என்ற குறிப்பு இல்லை

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் :** நான் எதிர்பார்த்த கேள்விக்கு அமைச்சர் சூசகமாகப் பதில் சொல்லிவிட்டார்கள். வண்டலூருக்கா கிண்டிக்கா என்பது சந்தேகமாக இருந்தது. வண்டலூர் என்றால் அதை பார்க்கப் போகிறவர்களுக்கு தூரமாக இருக்கும். கிண்டியில் வைத்தால், சென்னைக்கு வருகிறவர்கள் அதைப் பார்ப்பதற்கு சவுகரியமாக இருக்கும். அதைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றி முன்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர் களால் கருத்து அறிவிக்கப்பட்டு, கிண்டியில் இருப்பது பொருத்தமாக இருக்குமென்ற கருத்தில்தான் இப்போது ஆராயப் படுகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** நம்முடைய சென்னை மாநகராட்சி யினால் மிருகக்காட்சி சாலையைச் சரிவர நடத்த முடியவில்லை என்றும் மற்ற மாநிலங்களில் இருப்பதைப் போல, இதை மாநில அரசே எடுத்து, காட்டு இலாகா மூலமாகவோ, சுற்றுலா இலாகா மூலமாகவோ நடத்துவதற்கு ஏதேனும் அரசிடம் குறிப்பிருக் கிறதா ?

25th January 1972]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கருத்து தெரிவிக்கப்பட்டு வருகிறது. ஆனால் இதில் மாநகராட்சி மன்றத்தின் கருத்தை அறியவேண்டும். அவர்களாகப் பார்த்து இதை விட்டுவிட்டால் அதற்குப் பிறகு காட்டிலாகாவுக்கோ, விலங்கினத் துறைக்கோ விட்டு நடத்தச் செய்யலாம். மாநகராட்சியிலிருந்து கருத்து அறிய வேண்டியிருக்கிறது. பிறகுதான் தக்க முடிவை எடுக்கலாம்.

*National Commission of UNESCO*

* 22. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the help, if any, received from the National Commission of UNESCO for educational reform in the State?

'யுனெஸ்கோ'வின் தேசீய ஆணைக்குழு

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

இம் மாநிலத்தில் கல்விச் சீர்திருத்தத்திற்காக 'யுனெஸ்கோ' வின் தேசீய ஆணைக் குழுவிடமிருந்து உதவி பெற்றிருப்பின் அது யாது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ஆரம்பப் பள்ளிகளிலும் நடுத்தரப் பள்ளிகளிலும் அறிவியல் பயிற்சியை வளர்ப்பதற்கு யு.என்.ஐ.சி.ப்-லிருந்து உதவி கிடைத்தது.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** தலைவர் அவர்களே, இது யுனெஸ்கோ உதவி பற்றியது. இருந்தாலும் அண்மையில் முதலமைச்சர் அவர்கள் அமெரிக்கா சென்றிருந்தபோது அமெரிக்க நிபுணர்கள் இங்கே கல்விச் சீர்திருத்தத்திற்காக வருகிறார்கள் என்ற செய்தி வந்தது. அதுபற்றி அரசு மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அந்தக் கருத்தின் அடிப்படையில் பரிசீலனை நடந்துகொண்டு வருகிறது. இப்போதைக்கு முடிவாக உதவிகளின் தன்மை அறியப்பட்ட பிறகு, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். யுனெஸ்கோ தந்த வகையில் 50 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவியல் முறையில் பயிற்சி அளிக்க 100 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. நடுநிலைப் பள்ளிகளில் 30 தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு பள்ளிக்கு 3 ஆசிரியர்கள் வீதம் 90 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டது.

*Elementary School Teachers*

* 23 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether the teachers of the Kanyakumari district have protested about January-February, 1971, to the take over of Elementary Schools by the Panchayat Union; and

(*b*) If so, the reasons therefor and details thereof?